**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காட்பாடி,**

முன்னிலை: திரு.Tr. SKP திலிப்பாபு., M.A.ML.,

நீதித்துறை நடுவர்,

காட்பாடி

2026 வது வருடம் மார்ச் திங்கள் 06 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**குற்றப்பல்வகை மனு எண்.318/2026**

தேவராஜ், த/பெ முருகன்

... மனுதாரர் /குற்றஞ்சாட்டப்பட்டவர்

//எதிராக//

அரசுக்காக
காவல் ஆய்வாளர்,
காட்பாடி காவல் நிலையம்,
குற்ற எண்.35/2026 ... எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

இம்மனுவானது 06.03.2026 இன்று என் முன்பாக விசாரணைக்கு வந்து மனுதாரர்/குற்றஞ்சாட்டப்பட்ட நபரின் தரப்பில் அவர்களது கற்றறிந்த வழக்கறிஞர் திருS.நந்தீஸ்குமார் அவர்கள் முன்னிலையாகியும், அரசு தரப்பில் குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

1.வழக்கின் சுருக்கம்:

மனுதாரர்/குற்றஞ்சாட்டப்பட்ட நபர் மீது, விபரச்சார வழக்கில் ஈடுபட்டதாக தேவராஜ், த/பெ முருகன் என்பவர் மீது வழக்கு செய்யப்பட்டு இருப்பது தெரிய வந்தது. காட்பாடி காவல் நிலைய குற்ற எண். 35/2026 இதச பிரிவுகள் U/s 3(1), 4(2)(C), 5(1)(a) ITP ACT, 351(3)BNS–ன் படி கீழ் வழக்கு பதிவு செய்ததாக எதிரி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

2. மனுதாரர்/குற்றஞ்சாட்டப்பட்ட நபர் பிணை கோரி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார். எதிரி மீது காட்பாடி காவல் நிலைய குற்ற எண் 35/2026 இதச பிரிவுகள் U/s 3(1), 4(2)(C), 5(1)(a) ITP ACT, 351(3)BNS–ன்– வழக்கில் கண்டதேவராஜ், த/பெ முருகன், என்பவரை பிணையில் விட்டால் மேலும் இது போன்ற குற்ற சம்பவங்களில் ஈடுபடுவார் என்பதாலும் எதிரியை பிணையில் விட கடுமையான ஆட்சபேணை செய்கிறேன்.

3. இப்பிணை மனு மீது, அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபனை மனுவில், காட்பாடி காவல் நிலைய குற்ற எண் 35/2026 இதச பிரிவுகள் U/s 3(1), 4(2)(C), 5(1)(a)

ITP ACT, 351(3)BNS–ன்–வழக்கானது தொடர்ந்து புலன்விசாரணை நிலையில் இருந்து வருவதாலும் வழக்கில் கண்ட எதிரியை பிணையில் விடும் பட்சத்தில் இதே போன்று குற்ற செயல்களில் ஈடுபடுவார் என்பதாலும் பிணையில் வெளியில் வந்து சாட்சிகளை கலைக்கக்கூடும் என்பதாலும் மார்ஜனில் கண்ட எதிரியை பிணையில் விட கடுமையாக ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது.

4.இருபுறமும் கேட்கப்பட்டன, வழக்கு ஆவணங்கள் அனைத்தும் மிகுந்த கவனத்துடன் பரிசீலனை செய்யப்பட்டு கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டன.

5.எதிரியை பிணையில் விட்டால் மீண்டும் இதுபோன்ற குற்ற செயல்களில் ஈடுபடுவார் என்பதும், மேற்படி வழக்கு புலன்விசாரணை நிலுவையில் உள்ளதாக அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதிலில் கூறியுள்ளதை கருத்தில் கொண்டும், இந்த எதிரியை பிணையில் விட்டால் அது இவ்வழக்கின் புலன்விசாரணையை பாதிக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலில் கூறியுள்ள காரணங்கள் இந்நீதிமன்றத்திற்கு நிறைவாக உள்ளது என்பதால், இந்த பிணை மனுவை தள்ளுபடி செய்வதே நீதியின் நலனுக்கு உகந்ததாக அமையும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

6.முடிவில், இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 06.03.2026 ஆம் தேதி பகரப்பட்டது.

S K P DILIP BABU
Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.